முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொளி வாயிலாக திருச்சிராப்பள்ளி டி.வி.எஸ் டோல்கேட் அருகில் உலக தரத்திலான பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு 21.03.2025 அன்று அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்து மிக விரைவாக நடைபெற்று கட்டிடப் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு , பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. ஆகியோர் ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கினர். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், ச.மணிவண்ணன், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் வல்லுனர்கள் உடன் இருந்தனர்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் பொதுப்பணித் துறையின் சார்பில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் எலும்பு முறிவு சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், நகர கழக செயலாளர் நா.ராஜேந்திரகுமார், கழக விவசாய தொழிலாளர் அணை துணை செயலாளர் ச.ராஜசேகரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்ரமணியம், பல்லடம் நகர்மன்ற தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார், இணை இயக்குநர் (மருத்தவ நலப்பணிகள்) மரு.மீரா, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) முத்து சரவணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட மனநல அவசர சிகிச்சை மற்றும் மீள் மையம், ரூபாய் 86 இலட்சம் மதிப்பீட்டில் நோயுற்ற பச்சிளம் குழந்தைகளை தாயுடன் ஒன்றிணைத்து தீவிர பராமரிப்பு அளித்து விரைவில் குணமடைய வைக்கும் பிரிவு, ரூபாய் 16 இலட்சம் மதிப்பீட்டில் முதல் நிலை துணை இனப்பெருக்க மையத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் திறந்து வைத்து, ரூபாய் 60 இலட்சத்திற்கு வளர்ச்சி குறைபாடான குழந்தைகளுக்கு குரோத் ஹார்மோன் வழங்கி, மாவட்ட ஆட்சியர் சிறப்பு கண்ணொளி திட்டத்தின் கீழ் 50 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடியினை வழங்கினார். இதில் முதன்மை செயலாளர் பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோவை கணபதி ப.ராஜ்குமார், பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், ஏர்போர்ட் ராஜேந்திரன், மீனா லோகு, மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர்.நிர்மலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சையில்

முதல்வர் மருந்தகத்தில் திடீர் ஆய்வு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு செயல்பாடு குறித்து கேட்டறிந்தார்!

தஞ்சை, ஜூன் 17 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூரில் உள்ள முதல்வர் மருந்தகத்தில் திடீர் ஆய்வு செய்து - மருந்து இருப்பு, சேவையின் தரம் குறித்து நேரடியாக கேட்டறிந்தார்.

தஞ்சாவூரில் நடைபெறும் பல் வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்ப தற்காக வருகை தந்துள்ள முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.6.2025 அன்று தஞ்சாவூரில் உள்ள முதல்வர் மருந்தகத்தை திடீரென பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, மருந்து களின் இருப்பு நிலை, வழங்கும் நடைமுறை, மற்றும் பொதுமக்கள் வருகை குறித்து பணியாளர்களிடம் நேரடியாக விவரங்களை கேட்டறிந் தார். மக்கள் நலன் கருதி குறைந்த விலையில் மருந்துகளை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்ட முதல்வர் மருந்தகம் திட்டத்தின் செயல்பாடு கள் மற்றும் சேவையின் தரம் குறித் தும் விரிவாக ஆராய்ந்தார்.

இத்திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாக வும், அதன் மூலம் மருத்துவச் செலவுகள் கணிசமாக குறைத்துவ ருவ தாகவும், அந்த மருந்தகம் பணி யாளர் முதல்வரிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு

பெரம்பலூர் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஜூன் 17 –

பெரம்பலூர் மாவட்டத்தில் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அனைத்து ஒன்றியங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப் பாகக் கொண்டாட வேண்டும் என்று மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் விடுத்துள்ள வேண் டுகோள் வருமாறு:

வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம்!

நாள்: 21.06.2025.

1.அனுக்கூர் தூய்மை பணியா ளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

2. வாலிகண்டபுரம் ஊராட்சி யில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

3.தேவையூர் தூய்மைப் பணி யாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

4.எறையூர் ஊராட்சியில் தூய் மைப்பணி யாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்.

5.வி.களத்தூர் ஊராட்சியில் தூய்மைப்பணி யாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

பெரம்பலூர் ஒன்றியம்!

நாள்: 25.06.2025.

1.கோனேரிப்பாளையம் ஆதர வற்ற முதி யோர்கள் இல்லத்தில் 100 நபர்களுக்கு வேஷ்டி,சேலை வழங்குதல்.

2. இலாடபுரம் கிராம ஊராட்சி யில் தூய்மை ப்பணியாளர்களுக்கு வேஷ்டி சேலை வழங்குதல்.

3.அய்யலூர் ஆதிதிராவிடர் நலத்துவக்கப்பள்ளி மாணவர்களு களுக்கு, நோட்டு புத்தகம் வழங்கு தல்.

4.அம்மாபாளையம் ஊராட்சி யில் தூய்மைப் பணியாளர்களுக்கு வேஷ்டி, சேலை வழங்குதல்.

பெரம்பலூர் நகரம்!

பெரம்பலூர் நகரத்தில் உள்ள அரசுப் பள்ளி மாணவ, மாணவிக ளுக்கு நோட்டு, புத்தகம் வழங்கு தல், நலத்திட்ட உதவிகள் வழங்கி,

21 வார்டுகளிலும் கழகக் கொடியேற்றி,நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

இந்த நிகழ்ச்சிகளை அந்தந்த ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செய லாளர்கள் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கலைஞர் கருவூல துணை அமைப்பாளர்

தஞ்சை இரா.ரத்தினகிரி மருத்துவமனையில் அனுமதி!

குடும்பத்தினரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நலம் விசாரித்தார்!

தஞ்சை, ஜூன் 17 –

கலைஞர் கருவூல துணை அமைப் பாளர் தஞ்சை இரா.ரத்தினகிரி உடல் நலம் குன்றி தஞ்சை மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டு தீவிரச் சிகிச் சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகி றார்.

இந்நிலையில் தஞ்சையில் பல் வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இரத்தினகிரி சிகிச்சைப் பெற்று வரும் மருத்துவமனைக்குச் சென்று அங்கு அவரின் குடும்பத்தா ரிடம் நலம் விசாரித்தார். மேலும் மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் - செம்மொழி நாள் பொதுக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை!

திருவாரூர், ஜூன்17 –

திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார் பில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான செம்மொழி நாள் சிறப்பு பொதுக்கூட்டம் நாளை (18.06.2025 – புதன்) மாலை 6.00 நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமது 14வயதில் தமிழ் மொழி காக்க திருவாரூர் வீதிகளில் புலிக்கொடி ஏந்தி புறப்பட்ட அந்த மொழிப்போரின் விளைவாக தமிழ் இன்று சர்வதேச தரத்துடன் மூத்த முதல் மொழியாய் பாரெங்கும் பட டொளி வீசி பறக்கிறது. தமது வாழ் நாள் முழுவதும் தமிழ் மொழியும் இனமும் தழைக்க வேண்டும் என போராடிய அந்த மகத்தான தலைவ ரின் தமிழ் தொண்டினை போற்றும் விதமாக தமிழ்நாடு முதல்வர் ,திரா விட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர் கள் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை ஜூன் 3 செம்மொழி நாளாக அறிவித்து பெருமை சேர்த்து இருக் கிறார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை இந்த உலகிற்கு தந்து பெருமைபெற்ற திருவாரூர் மாவட்ட திமுக சார்பில் கலைஞர் பிறந்த நாளான செம்மொழி நாள் சிறப்பு பொதுக்கூட்டம் நாளை (18.06.2025 – புதன்) மாலை 6.00 மணிக்கு திருவாரூர் கீழவீதில் நடைபெற இருக்கிறது . இந்த கூட் டத்தில் திராவிட இயக்கத்தின் போர்முரசம் நாவுக்கரசர் நாஞ்சில்

சம்பத் அவர்களும் , முன்னாள் அமைச்சர், முன்னாள் தாட்கோ தலைவர்,மாநில விவசாய தொழி லாளர் அணி செயலாளர் உ.மதிவா ணன் அவர்களும் , முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் நாகை. அ. அசோகன் உள்ளிட்டோரும் பங் கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

திருவாரூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் எஸ்.கே.வேதரத்தி னம் உள்ளிட்ட மாநில, மாவட்ட,ஒன் றிய ,நகர பேரூர் நிர்வாகிகள், பொதுக்குழு ,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலை ஏற்கவி ருக்கும் இந்த கூட்டத்திற்கு நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் வரவேற் புரையும், ஒன்றிய செய லாளர் புலிவலம் ஏ.தேவா நன்றி யும் கூறவிருக்கின்றனர்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வா கிகளும்,சார்பு அணிகளின் நிர்வா கிகளும், வார்டு கிளைக்கழக நிர் வாகிகள் ,கழக தோழர்களும் பொதுமக்களும் பெரும் திரளாக பங்கேற்றுச்சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன். இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவா ணன் எம்.எல்.ஏ.தமது அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை சார்பில் தருமபுரி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட அறங்காவலர்துறை தலைவர் மே. அன்பழகன், நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, ஓவியர்.குப்பன், மாலா, எம்.கே.துரை,ஆகியோர் பதவி ஏற்றனர். நிகழ்வில் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, நகர செயலாளர் நாட்டான் மாது, நகர் மன்ற துணை தலைவர் நித்யா அன்பழகன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் - கொரடாச்சேரி ஒன்றியங்களில்

ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள்!

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.திறந்து வைத்தார்!

திருவாரூர், ஜூன்17 -

திருவாரூர் தொகுதிக் குட்பட்ட கொரடாச்சேரி ஒன்றியங்களில் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதி தாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடங்கள், அங்கன்வாடி மையங்கள், பொது விநி யோக கடை கட்டிடங்கள், உடற்பயிற்சி கூடம் மற்றும் பயணிகள் நிழலகத்தினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் திறந்து வைத்தார்.

கொரடாச்சேரி ஒன்றி யப்பகுதிகளைசேர்ந்த களத்தூர் ஊராட்சியில், சட் டமன்ற உறுப்பினர் மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்தினை யும், மேலராதாநல்லூர் ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.15.49 இலட்சம் மதிப்பீட் டில் புதிதாக கட்டப்பட் டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தினையும்.

பருத்தியூர் ஊராட்சி யில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட் டத்தின் கீழ் ரூ.13.15 இலட் சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத் தினையும், தேவர்கண்டநல் லூர் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற் றும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட் டங்களின் கீழ் ரூ.16.79 இலட்சம் மதிப்பீட்டில் புதி தாக கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையம் கட்டிடத்தினையும்.

காட்டூர் ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி மதிப்பீட் டில் புதிதாக கட்டப்பட் டுள்ள பொது விநியோக கட்டிடத்தினையும், நாகக் குடி ஊராட்சி பண்ணைவி ளாகம் கிராமத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற் றும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட் டங்களின் கீழ் ரூ.16.79 இலட்சம் மதிப்பீட்டில் புதி தாக கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையம் கட்டிடத்தினையும்,

நாகக்குடி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.28.02 இலட்சம் மதிப் பீட்டில் புதிதாக கட்டப் பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினை யும், அரசவனங்காடு ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7 இலட் சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணி கள் நிழலகத்தினையும்,

எண்கண் ஊராட்சியில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட் டத்தின் கீழ் ரூ.22.65 இலட் சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் என மொத்தம் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதி தாக கட்டப்பட்டுள்ள கட் டிடங்களை பூண்டி. கே.கலைவாணன் எம். எல்.ஏ. திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து கொரடாச்சேரி ஒன்றியம் திருமதிக்குன்னம் ஊராட்சி யில் சிறப்பு கால்நடை சுகா தார மற்றும் விழிப்புணர்வு முகாமினை பூண்டி.கே. கலைவாணன் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்வுகளில் ஒன்றிய செயலாளர் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பூண்டி. கே.கலைவேந்தன் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வா கிகள் உடன் பங்கேற்றனர்.

தமிழ் இன தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், சின்ன வீரம்பட்டியில் அமைந்துள்ள உடுமலை கிழக்கு ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றியச் செயலாளர் எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) எஸ்.கே. மெய்ஞானமூர்த்தி தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 60க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், ஒன்றிய கழக நிர்வாகிகள் சின்ன வீரம்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பழனிசாமி, பெரியகோட்டை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பாலசுப்ரமணியம், குறிஞ்சேரி முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மணியரசு, சின்னவேடம்பட்டி தனபாலன் அரசன் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.